# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S.146/2018

## CNR.No.TNCB19000

Date: 23.03.2026 PW-2

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ரஜாக் பாய் | **வயது** | 68 |
| **த/பெ** | முகம்மது காசிம் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | பகத்தூர் | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 23rd March 2026

வா.சா.2 மீண்டும் வரவழைக்கப்பட்டு 4-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

**4-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

ராஜூ குடும்பத்தார்கள் அனைவரும் எனக்கு பழக்கம். ராஜூக்கு குடிப்பழக்கம் உள்ளது. நானும் ராஜூவும் ஒன்றாக சேர்ந்துதான் குடிப்போம். ராஜூ குடும்பம் சம்பந்தப்பட்ட அனைத்து விபரங்களும் எனக்கு தெரியும் என்றால் முக்கால்வாசி எனக்கு சொல்வார். அவர் இறந்த பிறகு அவருடைய குடும்பத்தை பற்றி எனக்கு தெரியாது. அவர் இறந்ததற்கு பின்னிட்டு அவருடைய குடும்ப விபரம் குறித்து கார்த்திகாக சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கு உள்ள விபரம் இன்று சாட்சி சொல்லவேண்டும் என்ற விபரமும் கார்த்திகா சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் அதில் என்ன விபரம் உள்ளது என்ற விபரத்தை கார்த்திகா சொல்லி தெரியும்.

எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை கார்த்திகா சொல்லிதான் வழக்கறிஞர் தட்டச்சு செய்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். ராஜூவின் கையொப்பம் எனக்கு தெரியாது. அந்த அளவுக்கு எனக்கு நெருக்கம் இல்லையென்றால் சரிதான். அதனால் அவர் என்ன என்ன செய்தார் என்ன என்ன செய்வார்என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கார்த்திகா எனக்கு பணம் கொடுத்து அழைத்து வந்துள்ளார் என்றும் எனக்கு குடிப்பழக்கம் இருப்பதால் கார்த்திகா சொல்லி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.